**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், தென்காசி**
**முன்னிலை:– திரு. எஸ். மனோஜ்குமார், எம்.ஏ., எம்.எல்.,**
**கூடுதல் மாவட்ட நீதிபதி, தென்காசி.**
**2024 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 04 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**
**அசல் வழக்கு எண். 223/2021**
**( CNR No. TNTS01 000689 2021 )**

1) தென்காசி மாவட்டம், திருவேங்கடம் தாலுகா, அழகாபுரி கிராமம் என்ற முகவரியில் வசித்து வரும் வெள்ளத்துரை அவர்களின் மனைவி இந்து, 45 வயதுள்ள சமுத்திரம்

2) தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் தாலுகா, அச்சம்பட்டி மேலக்காலனி என்ற முகவரியில் வசித்து வரும் எபனேசர் அவர்களின் மனைவி இந்து, 40 வயதுள்ள சண்முகத்தாய்

......... வாதிகள்

/எதிர்/

1) தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் தாலுகா, வடக்குபுதூர் கிராமம், மஜரா அச்சம்பட்டி என்ற முகவரியில் வசித்து வரும் சண்முகம் அவர்களின் குமாரர் இந்து, 70 வயதுள்ள முத்தையா

2) தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் தாலுகா, வடக்குபுதூர் கிராமம், மஜரா அச்சம்பட்டி என்ற முகவரியில் வசித்து வரும் முத்தையா அவர்களின் குமாரர் இந்து, 52 வயதுள்ள ஈஸ்வரன்

3) தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் தாலுகா, வடக்குபுதூர் கிராமம், மஜரா அச்சம்பட்டி, கதவு எண். 3–16C, புதிய எண். 24 என்ற முகவரியில் வசித்து வரும் முத்தையா அவர்களின் குமாரர் இந்து, 38 வயதுள்ள கனிராஜ்

...... பிரதிவாதிகள்

பிராதின் தபசில் சொத்துக்களில் வாதிகளுக்குரிய 2/5 பங்கு பாகத்தை நயமிதம் பார்த்து பிரிவினை செய்து, பிரிந்த பாகத்தை வாதிகளின் தனித்த சுவாதீனத்திற்கு விட்டுப்போகும்படிக்கும், தவறும் பட்சத்தில் வாதிகளே பிரிவினை செய்து தனித்த சுவாதீனம் அடைந்து கொள்ளும்படிக்கும், இவ்வழக்கில் ஓர் தீர்வு ஏற்படும்வரை பிரதிவாதிகளோ, அவர்களின் வாரிசுகளோ, வகையாட்களோ, ஏஜென்ட்டுகளோ, பிராதின் தபசில் சொத்துக்களை வேறு

மூன்றாம் நபர்களுக்கு வில்லங்க பாராதீனங்கள் செய்துவிடாதிருக்கும் வகையில் மேற்படியார்களுக்கு எதிரில் ஒரு நிரந்தர ஏவுக்கட்டளை உத்தரவு பிறப்பிக்கும்படிக்கும், வாதிகளுக்கு இவ்வழக்கின் செலவு தொகை பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கும்படிக்கும் உத்தரவிட வேண்டி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்குரை தாக்கலான நாள் | : | 13.08.2021 (முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருநெல்வேலி முன்பாக) (இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு 25.08.2021 அன்று இந்நீதிமன்றத்தால் பெறப்பட்டுள்ளது) |
| வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | : | 17.08.2021 |
| வழக்கு மூலம் | : | 23.12.2011, 31.08.2020, 01.09.2020 ஆகிய தேதிகளில் சங்கரன்கோவில் தாலுகா, வடக்குபுதூர் கிராம், அச்சம்பட்டியில் வைத்து உற்பத்தி. |
| அதிகார வரம்பின் மதிப்பு | : | ரூ.15,36,102/- |
| முத்திரைக்கட்டணம் | : | அ பரிகாரத்திற்கு தமிழ்நாடு நீதிமன்ற முத்திரை கட்டண சட்டம் 17/2003 மற்றும் அதன் சீர்திருத்த சட்டம் 6/2017 பிரிவு 37(2)ன் கீழ் ரூ.5000/-மும், ஆ பரிகாரத்திற்கு மேற்படி சட்டம் பிரிவு 27(C)ன் கீழ் ரூ.30/-ம் ஆக மொத்தம் ரூ.5030/-நீதிமன்ற முத்திரைக்கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது. |

இவ்வழக்கானது வழக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்தபோது, முன்னதாக வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. R. ராஜு அவர்களும், 2ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. R. சதீஷ் அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 3ம் பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாத நிலையில், 1 மற்றும் 3ம் பிரதிவாதிகள் தோன்றாதரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில் இன்று வழக்கு விசாரணையின்போது மனுதாரர் அழைத்தும் ஆஜராகாததால் இந்நீதிமன்றம் கட்டளையிட்டு வழங்கும்,

**தீர்ப்பாணை**

1. மனுதாரர் அழைத்து ஆஜராகவில்லை. மனுதாரரின் வருகை தவறுகைக்காக இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

2. செலவுத்தொகை குறித்த உத்தரவு இல்லை.

**1ம் தபசில்**

தென்காசி பதிவு மாவட்டம், **ச**ங்கான்கோவில் சார்பதி**வா**ளர் சர**கம்** வட**க்**குபு**தூ**ர் கிராமம், மஜரா **ஷை** வட**க்**குபு**தூ**ர் கிராமம்

1. புஞ்சை சர்வே எண். 21/2A1D நம்பரில் ஹெக் 0.98.5
2. ஷை சர்வே எண்,21/2A4 நம்பரில் ஹெக்டேர் 0.10.0
3. ஷை சர்வே எண். 21/2A3 நம்பரில் ஹெக்டேர் 0:03.0

ஆகமொத்தம் ஹெக் 1.11.5ல் மேல்பாதி 0.55.75-க்கு ஏ.1 செண்டு 37 3/4க்கு ச.அடி 60004க்கு ச.மீ 5574.5076 உள்ள புஞ்சை நிலமும், ஷை புஞ்சையில் உள்ள கல்கட்டு கிணர் ஜலம், கமலைக்குழி, பத்தல்நடை, வாய்க்கால் வழிநடை, கிணர் தண்ணீர் வகையறாவில் பாதி பாத்தியமும் தபசில் சரி.

(அரசு வழிகாட்டுதலின் படி சொத்து மதிப்பு சதுர அடி 1க்கு ரூ.32- என மதிப்பு உள்ளதால் தபசில் சொத்தில் 60004 சதுர அடி **உள்ளதால் அதற்கு மதிப்பு ரூ.19,20,120)**

**2ம் தபசில்**

தென்காசி பதிவு மாவட்டம், சங்கரன்கோவில் சார்பதிவாளர் சரகம், வடக்குபுதூர் கிராமம் மஜரா ஷை வடக்குபுதூர் கிராமம்

1. புஞ்சை சர்வே எண். 21/2A1D நம்பரில் ஹெக்டேர் 0.98.5
2. ஷை சர்வே எண். 21/2A3 நம்பரில் ஹெக் 0.03.0
3 ஷை சர்வே எண். 21/2A4 நம்பரில் ஹெக் 0.10.0

ஆகமொத்தம் ஹெக் 1.11.5-ல் கீழ்பாதி 0.55.75-க்கு ஏ.1 செ.37 3/4 க்கு ச.அடி 60004-க்கு ச.மீ. 5574.5076 உள்ள புஞ்சை நிலமும், ஷை புஞ்சையில் உள்ள கல்கட்டு, கிணர் ஜலம், கமலைக்குழி, பத்தல்நடை, வாய்க்கால் வழிநடை, கிணர், தண்ணீர் வகையறாவில் பாதி பாத்தியமும் சேர்ந்து தபசில் விபரம் சரி.

**(அரசு வழிகாட்டுதலின் படி சொத்து மதிப்பு சதுர அடி 1க்கு ரூ.32- என உள்ளதால் தபசில் சொத்தில் 60004 சதுர அடி உள்ளதால் அதற்கு மதிப்பு ரூ.19,20,128)**

2024 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 4 ம் நாள் என்னுடைய கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

(S/d-S.Manojkumar)
கூடுதல் மாவட்ட நீதிபதி,
தென்காசி

கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
தென்காசி.
அசல் வழக்கு எண். 223/2021
தீர்ப்பாணை
நாள்: 04.10.2024